www.Padasalai.Net

பள்ளிக் கல்வி இயக்ககம்

அனுப்புநர்
முனைவர்.ச.கண்ணப்பன்,
இயக்குநர்,
பள்ளிக்கல்வி இயக்ககம்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
சென்னை-06

பெறுநர்
முதன்மை கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண் : 073040/எம்2/இ2/2024 நாள்: 10 -10-2024

பொருள்: பள்ளிக் கல்விஇயக்ககம்- வானவில் மன்றம் - 2024 - 25 ஆம் கல்வியாண்டிற்கான செயல்பாடுகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் - போட்டிகள் நடைபெறும் தேதி மாற்றம் - தொடர்பாக.

பார்வை: 1. அரசாணை (நிலை) எண்.154 பள்ளிக் கல்வித் (SSA1) துறை, நாள்:03.07.2024.
2.பள்ளிக் கல்வித் துறை இயக்குநரின் கடித ந.க.எண். 073040/எம்2/இ2/2022, நாள்: .09.2024.

*****

பார்வை 2 ல் காணும் கடிதத்தின்படி, 2024-25ஆம் கல்வி ஆண்டிற்கான வானவில் மன்ற செயல்பாடுகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள், வானவில் மன்ற போட்டிகளில் பங்கேற்கும் குழந்தைகள், தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய குழுக்கள் மற்றும் போட்டிக்கான நெறிமுறைகள் ஆகியன குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டிக்கான தேதிகள் கீழ்காணும் அட்டவணைப்படி மாற்றியமைக்கப்படுகிறது. மேலும் போட்டியில் பள்ளி அளவில் பங்குபெறும் மாணவர்களின் விவரங்கள் பள்ளியின் EMIS தளத்தில் (School login) 25.10.2024 முதல் பதிவேற்றம் செய்யலாம்.

| முன்னர் அறிவிக்கப்பட்ட தேதி | | | தற்போது மாற்றியமைக்கப்பட்ட தேதி | |
|---|---|---|---|---|
| வ. எண் | போட்டி நிலை | போட்டி நடைபெறும் காலம் | போட்டி நடைபெறும் காலம் | வெற்றிபெற்ற மாணாக்கர்களின் விவரம் EMIS தளத்தில் பதிவேற்ற கடைசி நாள் |
| 1 | பள்ளி அளவிலான போட்டி | நவம்பர் இரண்டாம் வாரம் | அக்டோபர் 20 முதல் 28 வரை | அக்டோபர் 29 மற்றும் 30 |
| 2 | வட்டார அளவிலான போட்டி | நவம்பர் நான்காம் வாரம் | நவம்பர் 1 முதல் 8 வரை | நவம்பர் 8 மற்றும் 9 |

www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | மாவட்ட அளவிலான போட்டி | ஜனவரி 2025 | நவம்பர் 10 முதல் 20 வரை | நவம்பர் 20 மற்றும் 21 |
| 4 | மாநில அளவிலான போட்டி | பிப்ரவரி 2025 | நவம்பர் இறுதி வாரம் | நவம்பர் இறுதி வாரம் |

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள கால அட்டவணைப்படி, வானவில் மன்ற போட்டிக்கான ஒன்றிய மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை 15.10.2024 தேதிக்கு முன் அமைத்து போட்டிகளை நடத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், கணித மற்றும் அறிவியல் ஆசிரியர்களுக்கு போட்டிகள் சார்ந்து வானவில் மன்ற மாவட்ட குழு மற்றும் ஒன்றிய குழு மூலம் Orientation Meeting அக்டோபர் 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் நடத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இச்சுற்றறிக்கையை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து அலுவலர்கள் மற்றும் உயர்நிலை/மேல்நிலை தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பி உரிய காலத்திற்குள் எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் நடத்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

for இயக்குநர்
10/10/24

நகல்:-1).ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத்திட்ட இயக்குநர் ,சென்னை-06
(தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது)

2) உறுப்பினர் செயலாளர் தமிழ்நாடுமாதிரிப்பள்ளிகள், சென்னை-06,
( தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது)

3) தொடக்கக் கல்வி இயக்குநர்,தொடக்கக்கல்வி இயக்ககம்
( தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது)

4. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
( தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது)